**செயற்பொறியாளர், நீ.வ.து., மண்தன்மை (ம) ஆராய்ச்சிக் கோட்டம், தரமணி, சென்னை– 113 அவர்களின் செயல்முறை ஆணை.**

முன்னிலை: பொறி.நா.சுரேஷ்பாபு., எம்.டெக்.,
செயற்பொறியாளர், நீ.வ.து.,

**<u>செயல்முறை ஆணை எண். இசி1/ 1268 /2023–5, நாள்.13.09.2024</u>.**

பொருள்: பணியமைப்பு – நீ.வ.து., – த.நா.அமைச்சுப் பணித் தொகுதி – திருமதி.R.அருள்மொழி, இளநிலை உதவியாளர் (பிறந்த தேதி.15.07.1992) தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளுக்கான தேர்வு தொகுதி IV–ல் அடங்கிய இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்து நீர்வளத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது – மண்தன்மை (ம) ஆராய்ச்சிக் கோட்ட அலுவலகத்தில் 06.10.2023 முற்பகல் அன்று பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருவது – பணிவரன் முறை செய்து தகுதிகாண் பருவம் துவக்கி ஆணை வழங்குதல் – தொடர்பாக .

பார்வை:
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை, கடித எண். 1970/ PSD – D2 /2023, நாள். 31.08.2023.
2. முதன்மை தலைமைப் பொறியாளர், மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீ.வ.து., சேப்பாக்கம், சென்னை –5 அவர்களது செயல்முறை ஆணை எண். எஸ்3(3)/ 35336 /2023, நாள். 22.09.2023.
3. தலைமைப் பொறியாளர், நீ.வ.து., வடிவமைப்பு ஆராய்ச்சி (மற்றும்) கட்டுமான ஆதாரம், சேப்பாக்கம், சென்னை–5 அவர்களது செயல் முறை ஆணை எண். இ1/4191/2023–3, நாள். 03.10.2023.
4. சிறப்பு தலைமைப் பொறியாளர், நீ.வ.து.,வடிவமைப்பு வட்டம், சேப்பாக்கம், சென்னை–5, அவர்களின் செயல் முறை ஆணை எண். இ3/2057/2023, நாள். 05.10.2023.
5. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண். இசி1/ 1268/ 2023, நாள். 06.10.2023.
6. திருமதி.R.அருள்மொழி, இளநிலை உதவியாளர் அவர்களின் பணி சேர் கடித நாள். 06.10.2023.
7. திருமதி.R.அருள்மொழி, இளநிலை உதவியாளர் அவர்கள் மகப்பேறு விடுப்பு கோரி விண்ணப்பித்த நாள். 09.10.2023.
8. முதன்மை தலைமைப் பொறியாளர், மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீ.வ.து., சேப்பாக்கம், சென்னை –5 அவர்களது கடித எண். எஸ்3(3) /35336 /2023, நாள். 15.03.2024.
9. இவ்வலுவலக மகப்பேறு விடுப்பு ஒப்பளிப்பு செயல்முறை ஆணை எண். இசி1/ 1268 /2023–3 நாள். 01.04.2024.
10. திருமதி.R.அருள்மொழி, இளநிலை உதவியாளர் அவர்கள் மகப்பேறு விடுப்பு முடித்து பணி சேர் கடித நாள். 21.08.2024.

-----

பார்வை (1) முதல் (5) வரை காணும் ஆணைகளில் திருமதி.R.அருள்மொழி (பிறந்த தேதி.15.07.1992) அவர்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நடத்தப்பட்ட ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளுக்கான தேர்வு தொகுதி IV–ல் அடங்கிய இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு, நீர்வளத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, இக்கோட்டத்திற்கு பணிநியமனம் மற்றும் மறுபணியமர்வு செய்து ஆணை வழங்கப்பட்டு, தனியர் இக்கோட்ட அலுவலகத்தில் 06.10.2023 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக

இதனை தொடர்ந்து பார்வை (7)–இல் காணும் விண்ணப்பத்தில் தனியர் தனக்கு 23.08.2023 அன்று அறுவை சிகிச்சை மூலமாக குழந்தை பிறந்துள்ளதால் குழந்தை பராமரிப்பு மற்றும் தனது உடல் நலத்தை பேணுவதற்காக 09.10.2023 முதல் 22.08.2024 வரை மகப்பேறு விடுப்பு வழங்கக் கோரியதை தொடர்ந்து, அரசாணை (நிலை) எண்.84, ம.வ.மே. (அ.வி–III) துறை, நாள்.23.08.2021 மற்றும் பார்வை (8)–இல் காணும் முதன்மை தலைமைப் பொறியாளர், மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீ.வ.து., சேப்பாக்கம், சென்னை–5 அவர்களின் தெளிவுரையில் தெரிவித்துள்ள படியும் பிரசவ தேதியிலிருந்து அரசுப் பணியில் சேர்ந்த நாள் வரையிலான 47 நாட்களை கழித்து (23.08.2023 முதல் 08.10.2023 வரை) மீதமுள்ள 318 நாட்களுக்கு (09.10.2023 முதல் 21.08.2024 வரை) மகப்பேறு விடுப்பு ஒப்பளிப்பு செய்யப்பட்டு, தனியர் மகப்பேறு விடுப்பு துய்த்து 21.08.2024 அன்று முற்பகல் மீண்டும் இக்கோட்ட அலுவலகத்தில் பணியில் சேர்ந்தார்.

எனவே தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணிநிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 28 (1)–ன் படி இந்த நியமனம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் / சென்னை மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளுக்கான தேர்வுத் தொகுதி IV-இன் தொடர்பாக, தொடுக்கப்பட்ட வழக்குகளில் வழங்கப்படவுள்ள தீர்ப்புக்குட்பட்டது என்ற நிபந்தனையுடன் திருமதி.R.அருள்மொழி, இளநிலை உதவியாளர் அவர்கள் பணியில் சேர்ந்த நாளான 06.10.2023 முற்பகல் முதல் அவரது பணியினை பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

மேலும் பணிவரன்முறை செய்யப்பட்ட திருமதி.R.அருள்மொழி, இளநிலை உதவியாளர் அவர்கள் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகள் 32(a)(i)–இன்படி அப்பதவியில் தொடர்ந்து மூன்றாண்டு காலத்திற்குள் இரண்டாண்டுகளில் தகுதிகாண் பருவம் நிறைவு செய்ய வேண்டும் எனவும் ஆணை வழங்கப்படுகிறது.

செயற்பொறியாளர், நீ.வ.து.,
மண்தன்மை (ம) ஆராய்ச்சிக் கோட்டம்,
தரமணி, சென்னை–113.

13/9/24

பெறுநர்.
திருமதி.R.அருள்மொழி,
இளநிலை உதவியாளர்.
மண்தன்மை (ம) ஆராய்ச்சிக் கோட்டம்,
தரமணி, சென்னை–113.